தேசிய ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டுக்கான அலுவலகமானது 2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலம் நிறுவப்பட்ட ஒரு நிறுவனமாகும். மேற்படி அலுவலகத்தில் பின்வரும் பதவிகளுக்குத் தகைமைவாய்ந்த நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## கணக்கீட்டு உத்தியோகத்தர் பதவிகளின் எண்ணிக்கை: 01

சேவைப் பிரிவு: **JM 1-1**

## பதவியின் தன்மை

- இலங்கை அரச துறை கணக்கீட்டுத் நியமங்களுக்கு அமைவாக நிதி அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பித்தல்.
- சகல கணக்காய்வுக் கேள்விகளுக்கும் பதிலளித்தல், அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய கணக்குக் குழு சம்பந்தமான நடவடிக்கைகள், அவை தொடர்பான புத்தகங்கள், ஆவணங்களைப் பேணுதல்.
- அனைத்து நிதித் திட்டங்களையும் (நிதிப் பிரமாணம் 135 இன் கீழ் அதிகாரமளித்தல், கொள்முதல் திட்டங்கள்) தயாரித்தல், திருத்தம் செய்தல் மற்றும் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல்.
- சம்பளம் உள்ளடங்கலாக சகல கிடைப்பனவு மற்றும் கொடுப்பனவு வவுச்சர்களைப் பரிசோதித்தல்.
- பாதுகாப்புப் பெட்டகப் (Safe) பொறுப்பாளராகச் செயற்படுதல்.
- வங்கி இணக்கக்கூற்றுக்களைப் பரிசோதித்தல்.
- உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கைகளை உரியவாறு தயாரித்தல்.
- ஆளுகைச் சபைக்குச் சமர்ப்பிக்க வேண்டிய அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அமைச்சுக்குச் சமர்ப்பிக்க வேண்டிய பல்வேறு அறிக்கைகளைத் தயாரித்துச் சமர்ப்பித்தல்.
- காசோலைகளில் இரண்டாவது கையொப்பமிடுபவராகச் செயற்படுதல்.
- நிதிப் பிரிவின் பொதுவான அன்றாட நிர்வாக மற்றும் அலுவலக நடவடிக்கைகள்.

- பொது நிர்வாகம், திறைசேரி மற்றும் நிரல் அமைச்சு ஆகியவற்றினால் வெளியிடப்படும் சுற்றறிக்கைகளைத் தனித்தனியாகக் கோப்பகப்படுத்திப் பேணுதல்.
- பணிப்பாளர் நாயகத்தினால் ஒப்படைக்கப்படும் ஏனைய கடமைகளை நிறைவேற்றல்.

---

## தகைமைகள் (கீழ்வரும் 1 அல்லது 2)

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கணக்கீடு / வர்த்தகம் / வியாபார நிர்வாகம் அல்லது பதவிக்குரிய விடயத்துறையொன்றில் பட்டமொன்றைப் பெற்றிருத்தல்.

2. பதவிக்குரிய விடயத்துறைக்குப் பொருத்தமான, அங்கீகரிக்கப்பட்ட பட்டயத் தொழில்முறை நிறுவனமொன்றின் இடைநிலைப் (Intermediate) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல்.

## வயதெல்லை

22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

---

## சம்பள அளவுத்திட்டம்

**JM 1-1 – 2025 – ரூ. (72,650 - 10 x 1,360 - 18 x 2,040 - 122,970)**

(2025.03.25ஆம் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருப இலக்கம் 01/2025இற்கு அமைவாக)